# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 6: இராஜாவின் கட்டளை

**தானியேல் 6:1-28**

### நடந்த கதை ...

மேதிய-பெர்சிய ராஜா தரியு பாபிலோனைப் பிடித்தார்; ஒருவர் தவிர, பாபிலோனிய அதிகாரிகள் அனைவரையும் கொன்றார். தப்பின பாக்கியசாலி பெயர் தானியேல்; மெய்த்தேவனுடைய ஊழியக்காரர். 70 ஆண்டுகளுக்கு முன்னர் யூதாவிலிருந்து பாபிலோனுக்குக் கைதியாகக் கொண்டுவரப்பட்டவர்; அரண்மனையில் பாபிலோனின் ராஜாக்களுக்கு ஆலோசகர் வேலையில் அமர்த்தப்பட்டவர். 'விசேஷித்த ஆவி' உடையவரென ராஜ்யம் முழுவதிலும் பிரபலமாகியிருந்தார். தானியேல் 5:12; 6:3.

தானியேலை தரியு கைதுசெய்யவில்லை; அது போதாதென்று, அவரை 'ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக' ஏற்படுத்தினார். தானியேல் 6:3. எபிரெயக் கைதி ஒருவனை மேலதிகாரியாக்க ராஜா விரும்பியதை அறிந்த மேதிய- பெர்சிய அதிகாரிகள் தானியேல் மேல் பொறாமைகொண்டனர். எனவே, தரியு ராஜாவிடம் நயமாகப் பேசி, ஒரு சட்டத்தை இயற்றவைத்தார்கள். அந்தச் சட்டத்தின்படி, அடுத்த 30 நாட் களுக்கு, ராஜாவைத்தவிர வேறு கடவுள் அல்லது மனிதரை வணங்குகிறவர் சிங்கக்கெபியில் எறியப்பட வேண்டும். தானி 6:7.



தானியேல் தன் ஜெப வாழ்க்கையில் உறுதியானவர் என்பதும், தன் தெய்வத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் உறுதியுள்ளவர் என்பதும் அந்த மனிதர்களுக்குத் தெரியும். யாத் 20:3.

அந்த அதிகாரிகள் எதிர்பார்த்தது போலவே, பலகணிகள் திறந்திருக்க, தானியேல் தன் தேவனை நோக்கி ஜெபித்தபோது அவரைப் பிடித்தார்கள்.

தான் ஏமாற்றப்பட்டதை தரியு அறிந்தார்; தன் முதிய நண்பனை சிங்கக்கெபியில் போடவிடாமல் தடுக்க, தான் கையெழுத்திட்ட முட்டாள்த்தனமான சட்டத்திலிருந்து தானியேலைக் காப்பாற்ற முயன்றார். ஆனால் சட்டம் இயற்றினது இயற்றினதுதான். தானியேலைச் சிங்கக்கெபியில் போட்டார்கள்; தேவன் தமது தூதனை அனுப்பி, சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார். தானி 6:22.

கடைசி நாட்களில், எந்த ராஜாவுக்கு, எந்தச் சட்டத்துக்கு தாங்கள் கீழ்ப்படியப்போகிறோமென தேவமக்கள் தீர்மானித்தாக வேண்டுமென்று தீர்க்கதரிசனம் கூறுகிறது.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. தேவனுடைய ஒழுக்கப்பிரமாணத்தை மறுதிருத்தம் செய்யவோ, ரத்து பண்ணவோ முடியுமா?

**லூக்கா 16:17.** *வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ____________________ எளிதாயிருக்கும்.*

**சங்கீதம் 89:34.** *என் உடன்படிக்கையை ______________, என் உதடுகள் விளம்பினதை ______________ இருப்பேன்.*

**சங்கீதம் 111:7,8.** *அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் ____________________ ____________________ உறுதியானவைகள்.*

**மல்கியா 3:6.** *நான் கர்த்தர், நான் ______________.*

**குறிப்பு:** தேவனுடைய பத்துக்கற்பனைகளை எந்தச் சூழ்நிலையிலும் மறுதிருத்தம் செய்யவோ, ரத்துசெய்யவோ முடியாது. தேவனைப் போலவே அவருடைய கட்டளையும் நிரந்தரமானது. வேதாகமத்தில், இவ்வுலகின் மூன்று ராஜாக்கள் (ஏரோது, அகாஸ்வேரு, தரியு) தாங்கள் இயற்றின சட்டத்தைப் பிறகு மாற்றநினைத்தும் மாற்றமுடியாமல் போயிற்று. பெலவீனமான, நிலையில்லாத ராஜாக்கள் இயற்றுகிற சட்டங்கள் மாற்றமுடியாதவை என்றால், தேவன் தம் விரலால் கற்பலகையில் எழுதிய அவருடைய நித்திய கட்டளையை மாற்றமுடியுமா? தேவனுக்கும் அவருடைய கட்டளைக்கும் உள்ள ஒற்றுமையைக் கீழே பாருங்கள்.

| தேவன் | | அவருடைய கட்டளை |
|---|---|---|
| லூக்கா 18:19 | நன்மை | ரோமர் 7:12 |
| ஏசாயா 5:16 | பரிசுத்தம் | ரோமர் 7:12 |
| உபாகமம் 32:4 | நீதி | ரோமர் 7:12 |
| மத்தேயு 5:48 | பூரணம் | சங்கீதம் 19:7 |
| 1யோவான் 4:8 | அன்பு | ரோமர் 13:10 |
| யாத்திராகமம் 9:27 | நீதி | சங்கீதம் 19:9 |
| உபாகமம் 32:4 | சத்தியம் | சங் 119:142,151 |
| 1யோவான் 3:3 | சுத்தம் | சங்கீதம் 19:8 |
| யோவான் 4:24 | ஆவிக்குரியது | ரோமர் 7:14 |
| மல்கியா 3:6 | மாறாதது | மத்தேயு 5:18 |
| ஆதியாகமம் 21:33 | நித்தியமானது | சங்கீதம் 111:7,8 |

தேவ கட்டளை மாற்றமுடியாதது; அது அவருடைய குணத்தின் பிரதிபலிப்பு. வேதாகமத்தில் தேவனை விவரிக்கும் மகிமையான வார்த்தைகள்தாம் அவருடைய கட்டளையையும் விவரிக்கின்றன. எழுத்து வடிவில் சொல்லப்பட்டுள்ள அவருடைய குணம்தான் கட்டளை. தேவனை மாற்றுவது சாத்தியமில்லை. அதுபோல அவருடைய கட்டளையை மாற்றுவதும் சாத்தியமில்லை.

### 2. வேதாகமத்தின்படி, பாவம் என்றால் என்ன?

**1யோவான் 3:4.** *நியாயப்பிரமாணத்தை ______________ பாவம்.*

**ரோமர் 3:20.** *பாவத்தை அறிகிற அறிவு ____________________ வருகிறது.*

**குறிப்பு:** பாவத்திலிருந்து நம்மை மீட்க நமக்கு ஓர் இரட்சகர் தேவை என்கிற உணர்வைக் கற்பனை தருகிறது. அதனால், சாத்தான் அந்தக் கற்பனையை வெறுக்கிறான். 'நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை' என்று ரோமர் 4:15 சொல்கிறது. நியாயப்பிரமானத்தால் யாரையும் இரட்சிக்கமுடியாது. ஆனால், தேவன் பாவமற்றவர் என்பதையும் நாம் பாவிகள் என்பதையும் நியாயப்பிரமாணம் காட்டுகிறது.

### 3. 1யோவான் 3:4 எந்த நியாயப்பிரமாணத்தைச் சுட்டிக்காட்டுகிறது?

**ரோமர் 7:7.** *பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் ____________________.*



**குறிப்பு:** 'இச்சியாதிருப்பாயாக' என்று தேவனுடைய பத்துக் கற்பனை கூறுகிறது. எனவே, தேவன் தம் சொந்த விரலால் எழுதிக்கொடுத்த பத்துக்கற்பனைச் சட்டத்தை மீறுவது பாவம். யாத் 31:18; 32:16. யாராக இருந்தாலும், எந்தவொரு பாவத்தைச் செய்தாலும், பத்துக் கற்பனைகளில் ஏதாவது ஒரு கட்டளை அதைக் கண்டிக்கிறதாக இருக்கும். அதனால்தான் தேவனுடைய பிரமாணமானது 'விஸ்தாரம்' (சங் 119:96) 'குறைவற்றது' (சங் 19:7) எனப்படுகிறது. 'மனுஷர் மேல் விழுந்த கடமை' முழுவதும் கற்பனையில் அடங்கியிருக்கிறது. பிரசங்கி 12:13. நம் பாவங்களை நாம் உணர்ந்ததும், அதிலிருந்து நம்மைக் காப்பாற்றும் இரட்சகரைத் தேடுகிறோம். நம்மை மன்னித்து, இரட்சிக்கும் இயேசுவை நாடிச்செல்லும்படி நியாயப்பிரமாணம் நமக்கு வழிகாட்டுவதால்தான் பிசாசுக்கு நியாயப்பிரமாணம் பிடிப்பதில்லை.

### 4. பத்துக்கற்பனைகளை இயேசு கைக்கொண்டாரா?

**யோவான் 15:10.** *நான் என் பிதாவின் கற்பனைகளைக் ____________________.*

**குறிப்பு:** நமக்கு முன்மாதிரியாக இயேசுதாமே பத்துக்கற்பனைகளின்படி நடந்தார். (1பேதுரு 2:21).

### 5. எத்தனை பேர் பாவம்செய்துள்ளார்கள்?

**ரோமர் 3:23.** *______________ பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகளா(னோம்).*

### 6. பாவவாழ்க்கை வாழ்வதற்கான தண்டனை என்ன?

**ரோமர் 6:23.** *பாவத்தின் சம்பளம் ______________.*

**குறிப்பு:** தேவனுடைய பிரமாணம் மாற்றப்படக்கூடுமானால், இயேசு சிலுவையில் மரித்திருக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. பாவத்திற்கான தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டு மரித்தார் என்கிற உண்மையானது பிரமாணம் மாற்றப்படமுடியாதது என்பதைக் காட்டுகிறது.

### 7. பத்துக்கற்பனை புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது என்று சிலர் சொல்கிறார்கள்; இயேசு அதுபற்றி என்ன சொல்கிறார்?

**மத்தேயு 19:17.** *நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் ______________.*

**யோவான் 14:15.** *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் ____________________.*

**வெளிப்படுதல் 22:14.** *அவருடைய கற்பனைகளின்படி ____________________ பாக்கியவான்கள்.*

**வெளிப்படுத்தல் 14:12.** *தேவனுடைய ____________________ ... காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்.*

**குறிப்பு:** தேவபிள்ளைகள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வார்களென்று புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியத்தை அநேகர் உணராததால்தான், இன்று உலகம் பெரிய பிரச்சனையைச் சந்தித்துவருகிறது. நம்முடைய நாட்களைப்பற்றி 'நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளை வந்தது; அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள்' என்று வேதாகமம் கூறுகிறது. சங்கீதம் 19:126.

### 8. கற்பனைகளைக் கைக்கொள்வது எவ்வாறு சாத்தியம்?

**ரோமர் 8:3,4.** *தம்முடைய குமாரனை ... அனுப்பி ... மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். ______________ நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*

**பிலிப்பியர் 1:5.** *______________ நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்.*

**பிலிப்பியர் 4:13.** *என்னைப் பெலப்படுத்துகிற ____________________ எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.*

**குறிப்பு:** ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, இயேசு கிறிஸ்து தம் பரிசுத்த ஆவியானவர்மூலம் அந்த நபரின் வாழ்க்கைக்குள் செல்கிறார்; கீழ்ப்படிதலைச் சாத்தியமாக்குகிறார்

### 9. பழைய உடன்படிக்கை என்ன? அது ஏன் செல்லுபடியாகவில்லை?

**உபாகமம் 4:13.** *நீங்கள் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்கு கட்டளையிட்ட ______________ தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்.*

**எபிரெயர் 8:8.** ______________ ______________, *அவர்களை நோக்கி: ... இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது.*

### 10. புதிய உடன்படிக்கை எந்தக் கற்பனையை அடிப்படையாகக் கொண்டுள்ளது?

**எபிரெயர் 8:10.** *நான் ... பண்ணும் உடன்படிக்கையாவது:* ______________ ______________ *அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய* ______________ *அவைகளை எழுதுவேன்.*

**குறிப்பு:** இரண்டு உடன்படிக்கைகளுமே தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையேயான ஒப்பந்தங்கள்தாம். பழைய உடன்படிக்கை ஏன் நிலைநிற்கவில்லை என்றால், அது மக்களுடைய பொய்யான வாக்குகளையும் கிரியைகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**யாத்திராகமம் 24:7.** *'அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.'*

புதிய உடன்படிக்கை ஏன் நிலைநிற்கிறது என்றால், தேவ பிரமாணம் மக்களின் இருதயத்தில் எழுதப்படுகிறது; இயேசுவின் வாக்குத்தத்தங்களையும் அற்புதம் செய்யும் அவருடைய வல்லமையையும் அது அடிப்படையாகக் கொண்டுள்ளது

**எபிரெயர் 8:10.** *'என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்.'*

ஒரு நபரின் முழுச் சுபாவமும் மாறுகிறது; தேவசித்தத்தைச் செய்யப் பிரியமுண்டாகிறது. அதே பிரமாணத்தின்படிதான் புதிய உடன்படிக்கையும் உள்ளது. ஆனால், அது வேறொரு இடத்தில் (இருதயத்தில்) எழுதப்பட்டுள்ளது; மேலான (தேவனுடைய) வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### 11. விசுவாசத்தினால் கிருபையின்கீழ் வாழ்வதால், தேவனுடைய கற்பனைகள் எப்படி நம்மைக் கட்டுப்படுத்தமுடியும்?

**ரோமர் 6:15.** *இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? (தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறலாமா?)* ______________.

**ரோமர் 3:31.** *விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல;* ______________ ______________.

**குறிப்பு:** தேவபிரமாணத்தை மீறி, இயேசுவிடமிருந்து மன்னிப்பைப் பெற்றவர்கள், அவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிய இருமடங்கு தங்களைஒப்புக்கொடுக்கவேண்டும். அவர் அருளிய மேலான மன்னிப்பை உணர்ந்து, இயேசுவைச் சந்தோஷமாகப் பின்பற்ற மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக வாஞ்சை கொள்ளவேண்டும்.

### 12. கற்பனைகளைக் கைக்கொள்வதால் இரட்சிக்கப்படமுடியுமா?

**எபேசியர் 2:8,9.** ______________ ______________ *கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.*

**குறிப்பு:** தேவ பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. தேவனுடைய கிருபையால்தான் அனைவரும் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால், இயேசுவின் கிருபையால் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்லது மாற்றமடைந்தவர்கள் அவருக்கு நன்றிசெலுத்தி, தங்கள் அன்பை வெளிப்படுத்தும்விதத்தில் அவருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவார்கள்.



### 13. தேவபிரமாணத்திற்குக் கீழ்ப்படிய ஒருவரை ஊக்கப்படுத்துவது எது?

**ரோமர் 13:10.** *ஆதலால்* ______________ *நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.*

**மத்தேயு 22:37–39.** *உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு* ______________ *உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்ன வென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.*

**1யோவான் 5:3.** *நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில்* ______________ *கூருவதாம்.*

**குறிப்பு:** அன்பு என்பது ஓர் உன்னதமான ஊக்கச்சக்தி. முதல் நான்கு கற்பனைகளில் தேவனுக்கு நான் செய்யவேண்டிய கடமை சொல்லப்பட்டுள்ளது. நான் அவரை நேசித்தால், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது ஒரு சந்தோஷ அனுபவமாக இருக்கும். மற்ற ஆறு கற்பனைகளில் மக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமை சொல்லப்பட்டுள்ளது. நாம் உண்மையிலேயே பிறரை நேசித்தால், அவர்களைப் புண்படுத்துகிற எதையும் செய்யமாட்டோம்.

### 14. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் நான் ஓர் உண்மைக் கிறிஸ்தவனாக இருக்கமுடியுமா?

**1யோவான் 2:3,4.** *அவருடைய கற்பனைகளை நாம்* ______________, *அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன்* ______________, *அவனுக்குள் சத்தியமில்லை.*

### 15. பழைய ஏற்பாட்டுக் கற்பனைகள் ஏதாவது கிறிஸ்தவர்களுக்கு அவசியமில்லாமல் போய்விட்டதா?

**எபேசியர் 2:15.** *சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே* ______________.

**குறிப்பு:** ஆசாரியத்துவத்தையும், பலிமுறையையும் கட்டுப்படுத்தின பிரமாணங்கள் ஒழிந்து போனது உண்மைதான்; ஏனென்றால் அவை கிறிஸ்துவைத்தான் சுட்டிக்காட்டின. கொலோ 2:13–17. தேவனுடைய மெய்யான ஆட்டுக்குட்டியாக அவர் அவற்றை நிறைவேற்றிவிட்டார்.

### 16. சாத்தான் குறிப்பாக யாரை வெறுக்கிறான்?

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது* ______________ *(சபை) கோபங்கொண்டு, தேவனுடைய* ______________ *கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று.*

**குறிப்பு:** தேவனுடைய கடைசிக்காலச் சபையானது இயேசுவின் கற்பனைகளைப் போதிக்கிறது; ஒரு பாவியைப் பரிசுத்தனாக மாற்றும் தெய்வீக வல்லமைபற்றி மக்களுக்குக் கூறுகிறது. அதனால்தான் சாத்தான் அந்தச் சபையை வெறுத்து, அதன்மேல் கடுங்கோபங்கொண்டுள்ளான்.

### 17. கற்பனைகளைக் கைக்கொள்வதால் கிடைக்கும் சில உன்னத நன்மைகள் யாவை?

**யோவான் 15:11.** *என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள்* ______________ ______________ *படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.*

**நீதிமொழிகள் 29:18.** *வேதத்தைக் காக்கிறவனோ* ______________.

**சங்கீதம் 119:165.** *உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த* ______________ *முண்டு; அவர்களுக்கு இடறலில்லை.*

**குறிப்பு:** தேவ பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் சந்தோஷமும், சமாதானமும், மகிழ்ச்சியும், பரிபூரண வாழ்க்கையும் பெறுகிறார்கள். தேவ கற்பனைகள் பொன்னைப் பார்க்கிலும் விரும்பப்படத்தக்கது என்று தாவீது சொன்னதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சங்கீதம் 19:10.



## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

இயேசுவின் சந்தோஷமான, அவருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளாக இருப்பதற்கு அவரோடு ஒரு அன்பான உறவை வைத்துக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா?

**பதில்:** ______________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

***வேதாகமக் கதாபாத்திரங்களுக்கும் இயேசுவுக்கும் இடையேயான ஒற்றுமைகள்:***

வேதாகம நாயகர்கள் பலர் இயேசுவின் சாட்சிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். மோசே, யோசேப்பு, தாவீது, சாலொமோன் போன்றோர் தங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் கிறிஸ்துவின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் பிரதிபலித்தார்கள். அந்த அனுபவங்கள், இயேசுவை தேவகுமாரனென்று உலகிற்கு உணர்த்த வேண்டும் என்பதுதான் தேவதிட்டம்.

சட்டத்திற்குக் கீழ்ப்படியாததால், சிங்கக்கெபியில் போடப்பட்ட தானியேலின் வாழ்வும் அந்த ஆவிக்குரிய உண்மையைத்தான் உணர்த்துகிறது. பின்வரும் ஒற்றுமைகளைக் கவனியுங்கள்.

- மேதிய-பெர்சிய ராஜாவோடு தானியேல் நெருக்கமாக இருந்தார்; அதனால் அந்நாட்டு அதிகாரிகள் பொறாமைகொண்டனர்; உயர் பதவியிலிருந்து தானியேலை அகற்ற விரும்பினர். 'அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தார்' என்று தானி 6:3 சொல்கிறது. அதுபோல, சர்வலோகத்தின் ராஜாவோடு இயேசு நெருங்கிய தொடர்புவைத்திருந்ததால், எருசலேமின் தலைவர்கள் அவரை ஒழித்துக்கட்ட விரும்பினார்கள். யோவான் 5:18-20.
- தானியேல் ஏதாவது தவறாகச் சொல்லமாட்டாரா, செய்யமாட்டாரா என்று, மேதிய-பெர்சிய அதிகாரிகள் தானியேலை நோட்டமிட்டவாறே அலைந்தார்கள். தானியேல் 6:4. இயேசுவின் நாட்களிலிருந்த மதத்தலைவர்கள் இயேசு ஏதாவது தவறாகச் சொல்கிறாரா, செய்கிறாரா என்று நோட்டமிட, அவர் பின்னே ஒற்றர்களை அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். லூக்கா 20:19,20.
- தானியேல்மேல் எந்தத் தவற்றையும் காணமுடியவில்லை; எனவே தங்கள் நோக்கங்களை நிறைவேற்ற ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள். தானி 6:5-9. அதுபோல, இயேசுவைச் சிக்கவைப்பதற்கு, பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் யூதாஸ்காரியோத்தோடு சேர்ந்து சதித்திட்டம் தீட்டினார்கள். லூக்கா 22:2-6. ஆனாலும், இயேசுவின்மேல் எந்தத் தவற்றையும் தான் காணவில்லை என்று பிலாத்து சொன்னான். யோவான் 19:4.
- தானியேலைச் சிங்கக்கெபிக்குள் எறிந்து, கெபியின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டி, அரசாங்க முத்திரை போட்டார்கள். தானி 6:16,17. இயேசுவை அடக்கம்பண்ணின கல்லறையின் வாசலையும் ஒரு பெரிய கல்லால் அடைத்து, அரசாங்க முத்திரை போட்டார்கள். மத்தேயு 27:58-60, 65,66.
- தானியேலும் இயேசுவும் ஒரு குற்றமும் செய்யவில்லை; இவ்வுலகச் சிறைகளிலிருந்து உயிரோடு வந்தார்கள். தானி 6:23; மத் 16:5,6.

இதேபோல், இயேசுவின் வாழ்க்கைக்கும் பிறவேதாகமப் பாத்திரங்களின் வாழ்க்கைக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைக் கண்டுபிடிக்க முயலுங்கள்.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com

AMAZING FACTS